ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1775/22 - 2012 සැප්තැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2012.09.14

*1775/22 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ.- பீ. 21/78* (VIII).

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ ஆம் பிரிவின் 2 ஆம் உட்பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதன் 18 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.*

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
2012, செத்தெம்பர் 05.

கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் 1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பட்டப்பின்படிப்பு அறிவியல் நிறுவகம் (திருத்தக் கட்டளைச் சட்டம்) என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2012 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. 1996 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 9 ஆந் திகதிய 909/13 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பட்டப்பின்படிப்பு அறிவியல் நிறுவகக் கட்டளைச் சட்டம், அதன் 9 ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :-

"9. (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபை, நிறுவகத்தின் கல்விசார் மற்றும் நிறைவேற்றுக் குழுவாகப் பணியாற்றுதல் வேண்டுமென்பதுடன், பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தலும் வேண்டும் :-

(1) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள், அதாவது -

(அ) பணிப்பாளர் ;

(ஆ) உயர்கல்வி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(இ) நிதி என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(ஈ) அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரின் நியமத்தர் ;

(உ) அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் அமைச்சின் கீழ் பணியாற்றுகின்ற தேசிய அறிவியல் மன்றத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி ;

(ஊ) இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழிற் பணியகச் சம்மேளனத்தின் தலைவர் அல்லது அவரது நியமத்தர்;

(எ) பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அறிவியற் பீடத்தின் பீடாதிபதி ;

(ஏ) (பேராதனைப் பல்கலைக்கழகம் நீங்கலாக) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட எல்லாப் பல்கலைக்கழகங்களினதும் அறிவியற் பீடங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு இன்னுமொரு பீடாதிபதி ; அவர், மேற்கூறப்பட்ட சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவியல்கள் பற்றிய நிலையியற் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(2) பின்வரும் ஏனைய உறுப்பினர்கள், அதாவது -

(அ) மேற்கூறப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் ; அத்துடன்

(ஆ) நிறுவகத்தினது கற்கைச் சபைகளினது உறுப்பினர்களினால் தம்முள்ளிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவரும் ஒவ்வொரு கற்கைச் சபையினையும் பிரதிநிதித்துவப்படுத்துபவருமான ஓர் உறுப்பினர்."

3. 2012 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதிய 1755/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பட்டப்பின்படிப்பு அறிவியல் நிறுவகக் கட்டளைச் சட்டம் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

9- 1263

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.